# பார்ன்வெல் தொடக்க பாடசாலை
# மாணவர், பெற்றோர்களுக்கான முக்கிய தகவல்கள்

அன்புள்ள பார்ன்வெல் குடும்பத்தினர்க்கு,

எமது பாடசாலை உங்களை வரவேற்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறது. நீங்கள் எங்கள் பாடசாலையை இலகுவாக விளங்கிக் கொள்வதற்கு இந்த முக்கிய தகவல்களை ஒன்று திரட்டியிருக்கிறோம். உங்கள் சந்தேகங்களை / தேவைகளை எம்மிடம் கேட்க தயங்க வேண்டாம்.

| | |
|---|---|
| பாடசாலை முகவரி: | *9425* **Barnwell Rd, Johns Creek, GA** *30022* |
| பாடசாலை தொலைபேசி: | *470-254-4960* |
| பாடசாலை தொலைநகல்: | *470-254-3330* |
| பாடசாலை இணையம்: | www.Barnwellelementary.org |
| பாடசாலை மாவட்ட இணையம்: | www.Fultonschools.org |

**பாடசாலை நேரம்:**

மாணவர்கள் வகுப்பறையில் இருக்க வேண்டிய நேரம் காலை *7:40*
பாடசாலை முடிவடையும் நேரம் பிற்பகல் *2:20*
மாணவர்கள் பாடசாலைக்குள் அனுமதிக்கப்படும் நேரம் காலை *7:10*

**தாமத வருகை:**

காலை *7:40* மணிக்குப் பின் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் தாமதமாக வந்தவர்களாக கருதப்படுவார்கள். தாமதமாக வரும் மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலை அலுவலகத்தில் நேரடியாக வந்து கையொப்பப் பதிவு செய்தால் மட்டுமே மாணவர்கள் வகுப்பறைக்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

**மாணவர் வரவின்மை:**

ஒரு நாளுக்கு அதிகமாக பாடசாலைக்கு வருகை தர முடியாத மாணவர்கள் தங்கள் வீட்டு வேலையை மறுநாள் காலை *9:00* மணிக்கு முன்னதாக பாடசாலை அலுவலகத்தில் அறிவித்து மாலை *2:30* மணிக்குப்பின் பெற்றுக்கொள்ளலாம்.

**பாடசாலை பேருந்து:**

மாணவர்கள் அவர்களுக்காக நியமிக்கப்பட்ட பேருந்துகளில் மட்டுமே பயணம் செய்ய முடியும்.

**பிரத்தியேக வாகனம்:**

பிரத்தியேக வாகனங்களில் பிரயாணம் செய்யும் மாணவர்களை அவர்கள் இறக்குவதற்க்காக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் மட்டுமே இறக்கிவிடப்பட வேண்டும். அறிமுக நாளில் (Open House) பங்குபற்றி பிரத்தியேக வாகன இலக்கத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் பாடசாலை அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

மாணவர்களை பாடசாலையில் இறக்கும் நேரம் காலை *7:10* முதல் *7:40* வரை
மாணவர்களை பாடசாலையில் இருந்து அழைத்துச் செல்லும் நேரம் பிற்பகல் *2:20*

பார்வையாளர்*:*

பார்வையாளர்கள் பாடசாலை அலுவலகத்தில் பதிவு செய்து அனுமதி அட்டை பெற்றுக்கொண்ட பின்னரே பாடசாலைக்குள் அனுமதிக்கப்படுவார்கள். பதிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டர்கள் அதற்குறிய பயிற்சி மற்றும் விதிமுறைகளை நிறைவு செய்த பின்னரே வகுப்பறைக்குள் அனுமதிக்கப்படுவார்கள். தன்னார்வத் தொண்டர்கள் பற்றிய விபரங்கள் அறிய www.Barnwellelementary.org என்ற இணையத்தை அணுகலாம்.

அதிபரின் செய்தி மடல் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்க மடல்*:*

அதிபரின் செய்தி மடல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், பெற்றோர் ஆசிரியர் சங்க மடல் ஒன்றுவிட்ட செவ்வாய்க்கிழமையும் மின்னஞ்சல் வழியாக அனுப்பப்படும்.

போக்குவரத்து*:*

மாணவர்களின் போக்குவரத்து மாற்றம் பாடசாலை அலுவலகத்தினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும். வகுப்பறை ஆசிரியர் மூலம் மேற்கொள்ளப்படக் கூடாது. போக்குவரத்து மாற்றத்துக்கான விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்தில் மற்றும் இணையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதர தகவல்கள்*:*

பாடசாலைக்குள் பலூன் அனுமதிக்கப்படமாட்டாது.

பெற்றோர்கள் தம் பிள்ளைகளை மதிய உணவு நேரத்தில் சந்திக்க வரும் போது தங்கள் பிள்ளைகளுக்கு மட்டுமே உணவு எடுத்து வர முடியும். பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு வெளி உணவு வகுப்பறையிலோ அல்லது உணவு விடுதியிலோ அனுமதிக்கப்படமாட்டாது. ஆனால் பாடசாலை உணவகத்தில் சிற்றுண்டிகளை கொள்வனவு செய்து சக மாணவர்களுக்கு மதிய உணவு நேரத்தில் விநியோகிக்கலாம்.

முக்கிய ஆவணங்கள் அடங்கிய சிவப்பு வர்ண கோவை ஒவ்வொரு வியாழக்கிழமையும் வீட்டுக்கு அனுப்பப்படும்.

மாணவர்களுக்கு தேவையான பொருட்களின் பட்டியலை பாடசாலை இணையதளம் மற்றும் பாடசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களுக்கு மொழி பெயர்ப்பாளர் தேவைப்படும் பட்சத்தில் *8* வேலை நாட்கள் முன்னறிவிப்புடன் பாடசாலை நிர்வாகம் அதற்கான ஒழுங்குகளை இயன்றவரை மேற்கொள்ளும்.

காலை உணவு*:*

காலை *7:10* மணி முதல் காலை *7:35* மணி வரை பரிமாறப்படும்.

**மதிய உணவு:**

**மதிய உணவு நேரத்தை உங்கள் ஆசிரியரிடம் இருந்து கேட்டு அறியவும். பாடசாலை ஆரம்பித்து மூன்றாவது கிழமையில் இருந்து குடும்பத்தினர் அவர்களது பிள்ளைகளுடன் உணவு அருந்த அனுமதிக்கப்படுவார்கள்.**

**உணவு மற்றும் விலைப் பட்டியல்: பின்வரும் இணையத்தில் பார்வையிடலாம்**

https://translate.google.com/translate?hl=en&sl=en&tl=ta&u=https%3A%2F%2Fnutrition.fultonschools.org%2FDefault

**மாணவர்களின் உணவுக் கணக்கு:**

https://translate.google.com/translate?hl=en&sl=en&tl=ta&u=https%3A%2F%2Fnutrition.fultonschools.org%2FMyPaymentsPlusFaq

**தொலைபேசி: மாணவர்கள் பொறுப்புணர்வை வலுப்படுத்தும் பொருட்டு வீட்டுப் பாடம், உணவுக் கட்டணம் போன்ற தேவைகளுக்காக தொலைபேசியை உபயோகிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.**

**பெற்றோர் ஆசிரியர் சங்கம்:**

**உங்கள் குழந்தைகளின் கல்வியில் பங்கேற்க பெற்றோர் ஆசிரியர் சங்கத்திற்கு உங்கள் பங்களிப்பும் ஆதரவும் இன்றியமையாதது. பெற்றோர் ஆசிரியர் சங்கமானது மாணவர்களை ஊக்கப்படுத்த பல நடவடிக்கைக்களை மேற்கொண்டு வருகிறது. எனவே உங்கள் பேராதரவை தெரிவிக்கும் வண்ணம் நீங்கள் உறுப்பினராக இணைந்து கொள்வதோடு மட்டுமன்றி உங்கள் தன்னார்வ சேவைகளையும் வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். உங்கள் உறுப்புரிமையை பெற்றுக்கொள்ள பெற்றோர் ஆசிரியர் சங்க அலுவலகத்தை மற்றும் இணையத்தை அணுகவும்.**